දුරකථන ) 0112669192 , 0112675011
தொலைபேசி ) 0112698507 , 0112694033
Telephone ) 0112675449 , 0112675280

ෆැක්ස් ) 0112693866
பெக்ஸ் ) 0112693869
Fax )0112692913

විද්‍යුත් තැපෑල )postmaster@health.gov.lk
மின்னஞ்சல் முகவரி )
e-mail )

වෙබ් අඩවිය ) www.health.gov.lk
இணையக்களம் )

මගේ අංකය )
எனது இல )
My No. ) CF/EXA/07/2021

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය )
திகதி )2021/..11./...19
Date )

සුවසිරිපාය
சுவசிரிபாய
**SUWASIRIPAYA**

සෞඛ්‍ය අමාත්‍යාංශය
சுகாதார அமைச்சு
**Ministry of Health**

---

பொது சுற்று நிருபக் கடித இலக்கம் 02 - 111 / 2021

மாகாண சுகாதார செயலாளர்கள்,
பிரதிப் பணிப்பாளர் நாயகம் - இலங்கைத் தேசிய வைத்தியசாலை
மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்கள்,
மத்திய அரசின் கீழ் நிர்வகிக்கப்படும் சகல வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள்,
மற்றும் நிறுவனங்களின் தலைவர்கள் அனைவருக்கும்,
பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர்கள்.
பன்முகப்படுத்தப்பட்ட பிரிவுகளின் தலைவர்கள்.

**சுகாதார அமைச்சில் துணை மருத்துவ சேவையில் (MT -04-2016) மருந்தாளர் தரம் II உத்தியொகத்தர்களின் பொருட்டான இரண்டாவது வினைத்திறமைகான் தடைப்பரீட்சை - 2021**

துணை மருத்துவ சேவையில் மருந்தாளர் தரம் II பதவிக்கு இணைக்கப்பட்டு 03 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னா் சித்தியடைய வேண்டிய முதலாவது வினைத்திறமை காண் தடைப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளிலும் நடாத்தப்படும் என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது. பரீட்சை நடைபெறும் திகதி, இடம், நேரம் என்பன பரீட்சை அனுமதி அட்டையில் குறிப்பிட்டு அனுப்பி வைக்கப்படும். **(விடயம் தொடர்பான வினாத்தாள் ஆங்கில மொழி மூலம் மாத்திரமே வழங்கப்படும்)**

02. **தகைமைகள் :-**

துணை மருத்துவ சேவையில் மருந்தாளர் தரம் II பதவிக்கு இணைக்கப்பட்டு இதுவரையிலும் பரீட்சையினைப் பூர்த்திசெய்யாத உத்தியோகத்தர்கள் மாத்திரம் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

**கவனிக்கவும்:- 2021.12.20 சேவையில் மருந்தாளர் தரம் II பதவிக்கு தரம் II ற்கு பதவி உயர்த்தப்பட்டு/ நியமிக்கப்பட்டு உரிய நியமனக்கடிதம் கிடைக்கப்பெற்றுள்ள உத்தியோகத்தர்களது விண்ணப்பங்களை மாத்திரம் எனக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கவும்.**

03. **விண்ணப்பங்கள்:-**

விண்ணப்பங்கள் இச்சுற்றுநிருபத்தின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தின் படி விண்ணப்பதாரர்களினால் தயாரித்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்களை திணைக்களத் தலைவரின் மூலம் கொழும்பு 10, இல.385, வண பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, சுவசிரிபாய கட்டிடத்தின் பணிப்பாளர் (பரீட்சைகள் கிளை) ருக்கு **2021.12.20** ஆம் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்பு கிடைக்கக்கூடியதாகப் பதிவுத்தபாலின் மூலம் அனுப்ப வேண்டும். சகல விண்ணப்பங்களிலும் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் பிழையற்றவைகளெனப் பிரிவுத்தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். (இதில் விரும்பிய படி அலுவலக முகவரி அல்லது சொந்த

முகவரி எழுதப்பட்ட ரூபா 45.00 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட "9 X 4" அளவுள்ள கடித உறைகள் இரண்டு இணைத்து அனுப்ப வேண்டும்) தாமதமாகி பெறப்படும் விண்ணப்பங்களும் பூரணமாகாத, தவறான விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது..

கவனிக்கவும் : மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய விண்ணப்பம் **A4** தாளின் இரண்டு பக்கங்களையும் உபயோகத்து தாயரிக்கப்படவேண்டும். முதற் பக்கத்தில் இலக்கம் **01 - 04** தொடக்கமும் இரண்டாம் பக்கத்தில் **05 - 09** தொடக்கமும் அமையும் வண்ணம் விண்ணப்பம் தயாரிக்கப்படல் வேண்டும். மேற்படி தகவல்களுக்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் யாவும் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

04. பரீட்சைக் கட்டணம்:-

I. பரீட்சைக்கு முதன் முறையாகத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சைக் கட்டணத்திலிருந்து விதிவிலக்கப்படுவர். ஏனைய விண்ணப்பதாரர்கள் ஒரு விடயத்திற்கு ரூபா 25/- வீதம் வலுவிலுள்ள முத்திரைகளை விண்ணப்பத்தில் ஒட்டி அதன் மேல் தனது கையொப்பத்தையும் திகதியையும் இட்டு அதை மதிப்பு நீக்கம் செய்தல் வேண்டும்.

II. எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் வேறு பரீட்சையொன்றின் பொருட்டு மாற்றவோ மீளச் செலுத்துவதோ புரியப்பட மாட்டாது.

05. பரீட்சைக்கு உட்படுத்திக் கொள்ளல்:-

I. ஏற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் பொருட்டு விண்ணப்பதாரர்களுக்கு பிரவேசப் பத்திரங்கள் வழங்கப்படும். அப்பிரவேசப் பத்திரங்களை உரிய முறையில் பூரணப்படுத்தி பரீட்சை நிலைய அதிபருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அவவாறின்றி பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்படமாட்டாது.

II. பரீட்சை விண்ணப்பதாரர்களினால் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை நிலைய அதிபருக்குத் தனது அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதன் பொருட்டு கீழே குறிப்பிடப்படும் ஆவணங்களுக்குள் ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) தேசிய அடையாள அட்டை
(ஆ) சுகாதார அமைச்சு மற்றும் அதனுடன் ஏற்புடைய நிறுவனங்களினால் முறைப்படி வழங்கப்பட்ட அடையாள அட்டை
(இ) வலுவுடைய சாரதி அனுமதிப்பத்திரம்
(ஈ) வலுவுடைய கடவுச் சீட்டு

06. பரீட்சைத்திட்டம்:-

**இப்பரீட்சை** திணைக்களப்பரீட்சை , வினைத்திறமை காண் தடைப் பரீட்சை ஆகிய இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. திணைக்களப் பரீட்சையானது எழுத்துப் பரீட்சை, வாய்மொழிப்பரீட்சை , பிரயோகப்பரீட்சை ஆகிய 3 பிரிவுகளைக் கொண்டுள்ளதுடன் ஒவ்வொரு பகுதியின் பொருட்டும் 100 புள்ளிகள் ஒதுக்கப்பட்டுள்ளது. சித்தியடைவதன் பொருட்டு எல்லா பகுதிகளுககும் ஆகக் குறைந்தது 40 புள்ளிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். **வினைத்திறமை காண் தடைப் பரீட்சையானது தாபன விதிக்கோவை , நிதிப் பிரமாணங்கள் எனும் இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது.** ஒவ்வொரு பிரிவிற்கும் 100 புள்ளிகள் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. தேர்ச்சியடைவதற்கு ஒரு பிரிவிலிருந்து குறைந்தது 40 புள்ளிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். ஒரே அமர்வில் அல்லது பல அமர்வுகளில் பிரிவுகளுக்குத் தோற்றி பரீட்சையினை பூரணப்படுத்திக்கொள்ள முடியும். **முதன்முறையாக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் அனைத்துப் பிரிவுகளிற்கும் விண்ணப்பிக்கவேண்டும்.**

07. பரீட்சைத்திட்டம்:-

7.1. **திணைக்களப் பரீட்சை**

7.1.1 **விடயம் தொடர்பான எழுத்து மூல வினாத்தாள்**

விடயம் தொடர்பான இப்பரீட்சைக்கான நேரம் 03 மணித்தியாலங்களாகும். கட்டுரை வினாக்கள் 08கொண்டமைந்துள்ளதுடன் அதில் 05 வினாவிற்கு மாத்திரம் விடையளிக்க வேண்டும். மொத்தப் புள்ளிகள் 100.

பாடத்திட்டம்:-

டிப்புளோமா பயிற்சி கற்கைநெறியின் பாடத்திட்டம் தொடர்பான கடமைகளின் தொகுப்புடன் தொடர்புடையவை

i. மருந்தியல் தொடர்பான கோட்பாடு சார்ந்த மற்றும்தொழிநுட்ப அறிவு

ii. மருந்து சேர்க்கை / கலவை தொடர்பான கோட்பாடுகள் மற்றும் நுட்பங்கள் பற்றிய அறிவு

iii. மருந்து முகாமைத்துவத்துடன் ( மருந்தினை ஒழுங்குபடுத்தல், களஞ்சியப்படுத்தல், களஞ்சிய கட்டுப்பாடு மருந்து மோசடி போன்றன ) தொடர்புடைய கோட்பாட்டு ரீதியான மற்றும் சட்ட ரீதியான அறிவு.

07.1.2. **வாய்மொழிப் பரீட்சை**

விடயப்பரப்பிற்கு ஏற்புடையதும் சேவையில் ஈடுபடும் பொழுது எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக **வாய்மொழிப்பரீட்சையாகும்** (நேரம் 15 நிமடம்)

07.1.3 **பிரயோகப்பரீட்சை**

விடயத்திற்கு ஏற்புடையனவான இயலுமைகள், செயலாற்றங்களையும் கொண்ட பிரயோகப் பரீட்சையாகும் விடயம் தொடர்பான எழுத்துமூல பரீட்சைக்குரியதான விடயப்பரப்பு இதற்கும் பொருந்தும்.

07.2 **வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை**

இப்பரீட்சையானது தாபனவிதிக்கோவை மற்றும் அலுவலக ஒழுங்குவிதிகள் மற்றும் நிதிப்பிரமானம் எனும் இரு வினாப்பத்திரங்கள் கொண்டுள்ளதுடன் ஒரு வினாப்பத்திரம் 100 புள்ளிகள் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் சித்தியடைவதன் பொருட்டு குறைந்தது 40 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

7.2.1 **தாபன விதிக்கோவை மற்றும் அலுவலக நடைமுறைகள் வினாத்தாள்**

இவ் வினாத்தாள் ஆனது தாபன விதிக்கோவையின் கீழ் வரும் அத்தியாயங்கள் மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஒழுங்குவிதிகளின் படி அமைந்த கட்டுரை வடிவிலான 07 வினாக்களைக் கொண்ட வினாப்பத்திரத்தில் 04 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும் நேரம் 02 மணித்தியாளம். மொத்தப்புள்ளி 100.

7.2.2 **தாபனவிதிக்கோவையின் பின்வரும் அத்தியாயங்கள்**

| | | |
|---|---|---|
| அத்தியாயம் | XV | கல்வி , பயிற்சி அல்லது கடமை நிமித்தம் வெளி நாட்டிற்குச் செல்லுதல் |
| அத்தியாயம் | XVI | விடுமுறைப் பயணம் (Holiday Travel ) |
| அத்தியாயம் | XXIII | விசேட வகையான நோய்கள் காரணமாக அல்லலப்படும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான விசேட சலுகைகள் மற்றும் நிபந்நதனைகள். |
| அத்தியாயம் | XXIV | சம்பளக் கடன் / முற்பணங்கள் |
| அத்தியாயம் | XXV | தொழிற்சங்க உறுப்பினர்களுக்கான சலுகைகள் |
| அத்தியாயம் | XXVII | தொடர்பாடல் முறைகள் |
| அத்தியாயம் | XXVIII | நிர்வாக நடைமுறைகள் |
| அத்தியாயம் | XXX | அரசாங்க ஊழியர்கள் மீதான அரசாங்கத்தின் உரிமைகள் |
| அத்தியாயம் | XXXIII | சட்ட ஆலோசளைனகளும் , சட்ட நடவடிக்கைகளும் |
| அத்தியாயம் | XLVII | பொது நடத்தையும் , ஒழுக்கமும் |
| அத்தியாயம் | XLVIII | ஒழுக்காற்று நடைமுறை |

❖ அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஒழுங்குவிதிகள்

7.2.3 நிதிப்பிரமாண வினாத்தாள்

இரண்டு மணித்தியாலங்களை கொண்ட கட்டுரை வினாத்தாள் ஏழு வினாக்களில் நான்கு வினாக்களக்கு மட்டும் விடையளிக்குக மொத்த புள்ளிகள் 100

அத்தியாயம் VI - பொது நிதியினைப் பராமரித்தல் / பாதுகாத்தல் (Custody) முதலியன காசு கட்டு நிதி மற்றும் வங்கிக்கணக்குகள் / பொதுநிதியின் பிணை / முறி , பொருட்களை கணக்கெடுத்தல் (Board of Survey) வங்கிப்பற்று , வங்கிக் கணக்குகள்
( நிதிப்பிரமாணங்கள் 315 - 396 )

அத்தியாயம் XIII - வேலைகள் வழுங்கப்படுதல்களுக்கும் மற்றும் சேவைகள் வழுங்கல்களுக்கும் பொருட் கொள்வனவு முறைகள் , களஞ்சியம் , பொருட்களைச் சரிபார்த்தல் , களஞ்சியப்படுத்தும் முறை , ஒப்பந்தங்கள் , பொருட்கொள்வனவு நடைமுறைகளில் இருந்து பிறழ்தல் ( நிதிப்பிரமாணங்கள் 708 - 775 )

08. **பரீட்சை தொடர்பான ஒழுங்குவிதிகளைக் கடைப்பிடித்தல்.**

பரீட்சார்த்திகள் குறிப்புக்களை தன்னிடத்தில் வைத்து பார்த்து எழுதுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய பரீட்சார்த்திகளின் விடைத்தாளினை பார்த்து எழுதுதலும் தடை செய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் உதவி செய்தலை தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். மேலும் கையடக்கத் தொலைபேசி மற்றும் அதனுடன் தொடர்புடைய தொடர்பாடல் ,இலத்திரணியல் உபகரணங்களை பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். இவ்விதிகளை மீறும் எந்தவொரு பரீட்சார்த்திமீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

09. தயவு செய்து இச்சுற்று நிருபத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை உங்களது பிரிவில் / விஷேட இயக்கத்தில் / நிறுவனத்தில் கடமையாற்றும் அனைத்து சுகாதார அமைச்சின் துணை மருத்துவ சேவையினது மருந்தாளர் தரம் II உத்தியோகத்தர்களுக்கு அறிவிப்பதற்கான ஒழுங்கினை மேற்கொள்ளவும். இந்த விபரங்களை www.health.gov.lk என்னும் இணையத் தளத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

**கவனிக்கவும் : சிங்கள, தமிழ், ஆங்கில சுற்று நிருபங்களில் ஏதாவது ஒவ்வாமை காணப்படுமிடத்து சிங்கள மொழயிலான சுற்று நிருபமே வலுவுடையதாகும்.**

**Chamika H. Gamage**
Deputy Director General (Administration) II
Ministry of Health
"Suwasiripaya"
Colombo 10.

சாமிக எச் கமகே
பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) II
செயலாளருக்காக
சுகாதார அமைச்சு

**EXA**

அலுவலகப்பிரயோகத்தின் பொருட்டு

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுகாதார அமைச்சில் துணை மருத்துவ சேவையில் (MT -04-2016) மருந்தாளர் தரம் உத்தியோகத்தர்களின் பொருட்டான இரண்டாவது வினைத்திறமைகான் தடைப்பரீட்சை - 2021**

01. (அ) (i) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (தமிழில் எழுதவும்)

.......................................................................................................................................

(ii) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (ஆங்கில கப்பிட்டல் எழுத்தில்)

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | |

(iii) முதலெழுத்துக்களுடன் பெயர் ( தமிழில்) .........................................................................

(iv) முதலெழுத்துக்களுடன் பெயர்( ஆங்கில கப்பிட்டல் எழுத்துக்களில்)

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | |

(ஆ) (i) தரம் II ற்கு பதவியுயர்த்தப்பட்ட அல்லது உள்ளீர்ப்பு செய்யப்பட்ட

கடித இலக்கமும் : .....................................................

திகதியும், ..........................................................................

(ii) தற்போது பெறும் வருடாந்த சம்பளம் : ..........................................................................

(iii) தேசிய அடையாள அட்டை இல : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

(iv) கையடக்கத் தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

(v) மின்னஞ்சல் முகவரி : ..........................................................................

02. நீங்கள் இம்முறை தோற்றுவதன் பொருட்டு எதிர்பார்த்துள்ள விடயத்தின் எதிரேயுள்ள கூண்டினுள் (√ ) அடையாளத்தினை இடுக. தோற்ற வில்லையாயின் (X) அடையாளமிடுக.

விடயம் தொடர்பான எழுத்து மூல வினாத்தாள் ☐ பிரயோகப் பரீட்சை ☐

நிதிப்பிரமாணம் ☐ வாய்மொழிப் பரீட்சை ☐

தாபன விதிக்கோவை மற்றும் அலுவலக நடைமுறைவிதி வினாத்தாள் ☐

03. (அ) தற்போது சேவைபுரியும் நிலையம் ( தமிழில்) ..........................................................................

(ஆங்கிலத்தில்) ..........................................................................

(ஆ) அதற்குரிய மாவட்டம் ..........................................................................

(இ) சேவை நிலையம் நிர்வகிக்கப்படுவது மத்திய அரசினால் ☐

மாகாண சபையினால் ☐

(ஈ) மாகாண சபையாயின் உரிய மாகாணம் ..........................................................................

(உ) பரீட்சை அனுமதி அட்டையினை அனுப்புவதன் பொருட்டு பிழையின்றி தெளிவாக தங்களுடைய முகவரி எழுதப்பட்ட 9" X 4" அளவுடைய, ரூபா 45.00 பெறுமதியுடைய முத்திரையொட்டப்பட்ட கடித உறைகள் மூன்று விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளதா? ..................................

(ஊ) (i) தபால் முகவரி (தமிழில்) ..........................................................................

..........................................................................

(ii) தபால் முகவரி (ஆங்கில கப்பிட்டல் எழுத்துக்களில்) ..........................................................................

..........................................................................

04. பரீட்சைக்குத் தோற்றும் மொழி ( சிங்களம் / தமிழ் / ஆங்கிலம் ) ..........................................................................

05. (அ) இதற்கு முன் இப்பரீட்சைக்குத் தோற்றி உள்ளீர்களா? ..................................................................

(ஆ) அவ்வாறு தோற்றி இருப்பின் இம்முறையின் பொருட்டு முத்திரை ஒட்டியுள்ளதா? .........................

| முத்திரைக் கூண்டு |
|---|

---

06. **விண்ணப்பதாரரின் சான்றிதழ்**

(1). இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவைகளெனவும் இப்பரீட்சைக்கு நான் தோற்றுவது முதன்முறையானபடியால் பரீட்சைக் கட்டணம் செழுத்த வேண்டிய அவசியமில்லை எனவும் / முதல் முறை அல்லாதபடியால் ரூபா.............. பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டுள்ளதெனவும் இவ்விண்ணப்பத்தில் என்னால் ஒட்டப்பட்டுள்ள முத்திரைகள் மதிப்பு நீக்கம் புரியப்படுவதற்கு முன்பு வலுவிலுள்ள பாவிக்கப்படாத முத்திரைகள் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

(11). சுகாதாரத் திணைக்களத்தினால் பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு உடந்தையாக நடப்பேன் எனவும் இப்பரீட்சை தொடர்பாக நியதிச்சட்டத்தின் படி நான் தகைமையற்றவன் எனக்காணப்படின் எனது பரீட்சார்த்தித் தன்மையை இரத்து செய்வதற்கு மேற்கொள்ளும் எதுவித தீர்மானத்திற்கும் நான் உடன்படுவேன் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்

..................................................

திகதி ......................................... விண்ணப்பதாரரின் கையொப்பம்

---

07. **தனிநபர் கோவையினை கையாளும் விடய உத்தியோகத்தரின் சான்றிதழ்**

இவ் விண்ணப்பமானது விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் என்னிடம் பாரமளிக்கப்பட்டது என்றும், சுயவிபரக் கோவையில் உள்ள தகவல்களின் அடிப்படையில் சரியாக பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும், இவ்விண்ணப்பப் பத்திரத்தின் பிரதி ஒன்று சுயவிபரக் கோவையில் கோவையிடப்பட்டுள்ளது என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

.....................................................................

திகதி .......................... பெயரும் கையொப்பமும், திகதியும்.

---

08. **நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

திரு/திருமதி/செல்வி* ........................................................... என்பவர்.................. உத்தியோகத்தராக எனது நிறுவனத்தில் பணிபுரிகின்றார் என்றும் அவ் உத்தியோகத்தர் இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறையாக உள்ளதால் / முதன் முறையாக இல்லாத* படியால் ரூபா ................ பெறுமதியான முத்திரைகள் இவ்விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளதாகவும் / முத்திரைகள் ஒட்ட அவசியமில்லை* எனவும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் விண்ணப்பதாரியின் சுயவிபரக் கோவையில் உள்ள விபரங்களின் படி சரியானவைகள் எனவும் , எனது முன்னிலையில் கையொப்பமிட்டுள்ளார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி ...................................... ......................................................

நிறுவனத் தலைவரின் கையொப்பம்

---

09. **பன்முகப்படுத்தப்பட்ட / விசேட இயக்கத் தலைவரின் சான்றிதழ்**

திரு/திருமதி/செல்வி* ........................................................ என்பவர் எனது பிரிவில் ∴ விசேட பிரிவில் மருந்தாளர் தரம் II உத்தியோகத்தராக பணியாற்றுகின்றார் என்றும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் சுயவிபரக் கோவைக்கு அமைய சரியானவையென்றும், இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரிய தகைமைகளினை இவர் பூர்த்தி செய்துள்ளார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

..............................................

பன்முகப்படுத்தப்பட்ட / விசேட இயக்கத்
தலைவரின் கையொப்பம்
(இறப்பர் முத்திரையிட வேண்டும்)

தேவையற்றவற்றை கீறிவிடவும்